இன்றைய வேளாண் செய்திகள்

04.10.2012 A.M

## காவிரி பிரச்னையால் காய்கறி விலை உயரும்



கூடலூர்: காவிரி பிரச்னையால், நீலகிரி மாவட்ட எல்லையில் உள்ள கக்கனல்லாவுடன் கர்நாடக காய்கறி வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. அங்கிருந்து, சிறிய வாகனங்களுக்கு காய்கறிகள் மாற்றப்பட்டு தமிழகத்திற்கு கொண்டு வரப்படுவதால், அவற்றின் விலை அதிகரிக்கும் நிலை உண்டாகிஉள்ளது.

போராட்டம் நீடிப்பு:காவிரி நதிநீர் ஆணையத்தின் உத்தரவு படி, தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடுமாறு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. இதையடுத்து, தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கர்நாடகாவில் போராட்டம் நடைபெற்று வருகிறது.இதனால், கடந்த 30ம் தேதி முதல் நீலகிரி மாவட்ட எல்லையில் உள்ள கக்கனல்லா வழியாக, கர்நாடகா சென்ற தமிழக பதிவு எண் கொண்ட வாகனங்களை போலீசார் திருப்பி அனுப்பினர். கர்நாடக மாநிலத்தின் வாகனங்களும் மூன்றாம் நாளாக நீலகிரிக்கு வருவதில்லை. இரு மாநில அரசு பஸ்களும் மாநில எல்லையான கக்கனல்லா வரை இயக்கப்பட்டு, அங்கிருந்து பயணிகள் செல் கின்றனர். அதே சமயம், பிற வாகனங்கள் இரு மாநிலங்களுக்கும் இடையே தடையின்றி இயங்கி வருகின்றன.கர்நாடகாவில் இருந்து வரும் காய்கறிகள் கக்கனல்லாவில் இறக்கப்பட்டு, பிற வாகனங்களின் மூலம் கொண்டு வரப்படுவதால், இவற்றின் விலை அதிகரிக்க

வாய்ப்புள்ளது.

பாதுகாப்பு:இரு மாநில அரசுகளும், போலீஸ் பாதுகாப்புடன் சரக்கு மற்றும் காய்கறி வாகனங்களை இயக்க வேண்டும் என, வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.காய்கறி வியாபாரி பாபு கூறுகையில்,""தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் குண்டல்பெட் உட்பட, கர்நாடகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, நாள்தோறும் கொண்டு வரப்படுகின்றன. தற்போதைய நிலை தொடர்ந்தால், காய்கறிகளின் விலை உயரும்'' என்றார்.

## தென்னையை தாக்கும் "பென்சில் பாயிண்ட்' நோய்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்னையில் நுண்ணூட்ட சத்து குறைபாடால் "பென்சில் பாயிண்ட்' என்ற புதிய நோய் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்று படுகை பகுதிகள் உள்ளிட்ட பல பகுதிகளில், 16 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஆற்று படுகை பகுதிகளான பாரூர், அரசம்பட்டி, புலியூர், பெண்டரஹள்ளி, கீழ்குப்பம், புங்கம்பட்டி, மருதேரி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் குட்டை மற்றும் நெட்டை ரக தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்த சில ஆண்டாக தென்னையில் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் காரணமாக, தென்னை மரங்கள் அதிக அளவில் காய்ந்து வருகிறது. இதனால், தென்னை சாகுபடியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.தற்போது, அரசம்பட்டி, பெண்டரஹள்ளி பகுதிகளில் தென்னை மரங்களை புது விதமான நோய் வேகமாக தாக்கி வருகிறது. நோய் தாக்கிய மரங்களில் ஓலைகளின் அளவு குறைந்தும், மஞ்சள் நிறமாக மாறியும், மரங்களின் நுனியில் மரம் சிறுத்தும் காணப்படுகிறது.மேலும் புதிய ஓலைகள் உருவாகாமல், 100 சதவீதம் தென்னை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.தகவல் அறிந்த பையூர் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் மணி, நோயியல் நிபுணர் கல்பனா, வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன். வேளாண் அலுவலர் வானதி உள்ளிட்ட குழுவினர் பெண்டரஹள்ளியில் நோய் தாக்கிய மரங்களை ஆய்வு செய்தனர்.ஆய்வில், தென்னையில் நுண்ணூட்ட சத்து குறைவால் "பென்சில் பாயிண்ட்' என்ற நோய் தாக்கியுள்ளது தெரிந்தது. இந்நோயை கட்டுப்படுத்தவில்லை என்றால் நோய் பரவி தென்னை மரங்களை அழித்து விடும் என்பதால் அந்த பகுதி தென்னை விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறையினர் கூறியது:மாவட்டத்தில் முதன் முறையாக தென்னையை "பென்சில் பாயிண்ட்' நோய் தாக்கியுள்ளது. இந்த நோயை கட்டுப்படுத்தாவிட்டால், தென்னை மரங்களின் நுனிகள் சிறுத்து

அழிந்துவிடும். இதனை தடுக்க மரங்களுக்கு நுண்ணூட்ட சத்தை வேர் மூலம் வழங்க வேண்டும்நோய் தாக்கிய தோட்டங்களில் விவசாயிகள் ஒரு மரத்துக்கு யூரியா ஒரு கிலோ, டி.ஏ.பி., ஒரு கிலோ, பொட்டாஷ் ஒன்னரை கிலோ, வேப்பம் புண்ணாக்கு இரண்டில் இருந்து ஐந்து கிலோ வரையிலும், சூடோமோனோமாஸ் 200 கிராம், டிரைகோ டெர்மாவிரிடி 200 கிராம் ஆகியவற்றை சேர்ந்து கலவையாக கலந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை இட வேண்டும்.இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை செய்தால் நோயை முற்றிலும் கட்டுப்பத்தலாம். நோயை கட்டுப்படுத்துதல் குறித்து விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு தெரிவித்தனர்.

## உரம் விலையை குறைத்தால் தான் விவசாயிகள் வாழ்வு செழிக்கும்



தமிழக அரசு, அறிவித்துள்ள நெல் கொள்முதல் விலை உயர்வு, விவசாயிகள் மத்தியில் பெரிய அளவில் வரவேற்பைப் பெறவில்லை; மாறாக, உரம் விலையைக் குறைத்தால் மட்டுமே, விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் என்ற கருத்து, விவசாயிகள் மத்தியில் உள்ளது.

தமிழக அரசு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லுக்கான, கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளது. அதன்படி, சாதாரண ரக நெல், குவிண்டாலுக்கு, 50 ரூபாயும், சன்ன நகர நெல்லுக்கு, 70 ரூபாயும் உயர்த்தப்பட்டுள்ளது.அரசின் கொள்முதல் உயர்வு உத்தரவு குறித்து, டெல்டா மாவட்ட விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகள் சங்கச் செயலர், தஞ்சை மாவட்டம் சோளகிரிப்பட்டி கோவிந்தராஜ்:** மத்திய அரசு வழங்கும் சாதாரண நெல் ரகம், குவிண்டாலுக்கு, 1,250 ரூபாயுடன், 50 ரூபாய் சேர்த்து, 1,300 ரூபாயும்; சன்ன நெல் ரகத்துக்கு, 1,280 ரூபாயுடன், 70 ரூபாயும் சேர்த்து, 1,350 ரூபாயும் வழங்க,

தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்ய, விவசாயிக்கு, 1,500 ரூபாய் செலவாகிறது. ஆனால், சாதாரண நெல் ரகத்துக்கு அரசு, 1,300 கொடுத்தால், 200 ரூபாய் நஷ்டம் தான் ஏற்படும்; இதுவே, சன்ன நெல் ரகத்துக்கு, 150 ரூபாய் நஷ்டமாகும். மொத்தம், 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை, டி.ஏ.பி., உரத்தின் விலை, 1,250 ரூபாய். ஆனால், 100 கிலோ, அதாவது, ஒரு குவிண்டால் சாதாரண நெல் ரகத்துக்கு அதை விட, 50 ரூபாய் தான் விலை வித்தியாசப்படுகிறது. உரத்துக்கு விலையை இவ்வளவு கடுமையாக ஏற்றியுள்ள நிலையில், குவிண்டால் நெல்லுக்கு மேலும், 300 ரூபாய் உயர்த்தி வழங்கினால் மட்டுமே விவசாயிகள் நஷ்டத்திலிருந்து மீள முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க, தஞ்சை மாவட்டச் செயலர் சுவாமிமலை விமலநாதன்:** தமிழக அரசு அறிவித்துள்ள நெல்லுக்கான ஆதார விலை, விவசாயிகளுக்கு ஆறுதலாகத் தான் உள்ளதே தவிர, ஆதரவாக இல்லை. ஏனென்றால், தற்போது வயல்களுக்கே நேரடியாக வந்து, தனியார் வியாபாரிகள், குவிண்டாலுக்கு, 1,600 ரூபாய் வரை கொடுத்து, சாதாரண, சன்ன ரக நெல்லை வாங்கிச் செல்கின்றனர். இதனால், அரசு நுகர்பொருள் வாணிபக் கிடங்குக்கு, விவசாயிகள் யாரும் இனி, நெல்லை கொண்டு போய் விற்க முன்வராத நிலையே ஏற்படும். அப்படி விற்றால், 300 ரூபாய் வரை நஷ்டமே ஏற்படும். அதனால், ரேஷனில் நுகர்வோருக்கு அரிசி கிடைக்க, விவசாயிகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு விற்க வேண்டுமானால், தமிழக அரசு, ஆதார விலையை மேலும், 300 ரூபாய் வரை உயர்த்தி தர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பாரதிய கிசான் சங்க மாநில துணைத் தலைவர் அய்யாகண்ணு கூறியதாவது:** நெல் கொள்முதல் விலையை உயர்த்தி அறிவித்தது வரவேற்கத்தக்கது; இருந்தாலும், யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது போலவே, இது உள்ளது. இன்று, 50 கிலோ பொட்டாஷ் உரம், 900 ரூபாய். முன்பு, 486க்கு விற்ற டி.ஏ.பி., 1,400 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதனால், பொட்டாஷ், டி.ஏ.பி., உரத்தை விவசாயிகள் வாங்குவதில்லை. யூரியாவை மட்டும் போடுகின்றனர். எனவே, யூரியாவையும் சம நிலைக்கு கொண்டு வர வேண்டும் என, மத்திய நிதியமைச்சர் சிதம்பரம், மத்திய ரசாயனத் துறை அமைச்சர் அழகிரிக்கு கடிதம் எழுதியுள்ளார். தற்போது, 261 ரூபாய்க்கு விற்கும் யூரியா, 700 ரூபாய் உயர வாய்ப்புள்ளது; இது மிகப்பெரிய மோசடி செயல். குவிண்டாலுக்கு, 50, 75 ரூபாய் மட்டும் நெல் விலையை உயர்த்துவதால் என்ன பிரயோஜனம்? உர விலை, 150 மடங்கு

உயர்ந்துள்ளது. விலையில்லா உரம் கொடுத்தால் பிரச்னையே இல்லை.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் (சி.பி.எம்.,) அயிலை சிவசூரியன்:**

குறைந்தபட்சம் நெல் குவிண்டாலுக்கு, 2,000 ரூபாய் தர வேண்டும் என, எதிர்பார்க்கிறோம். மின் தட்டுப்பாடு, டீசல் விலை, உர விலை உயர்வு போன்றவற்றோடு ஒப்பிட்டால், உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது. இதையெல்லாம் கணக்கிட்டு, நெல் கொள்முதல் விலையை உயர்த்தி, அரசு அறிவிக்க வேண்டும்.

## காட்டு நெல்லி வளர்ப்பில் விளக்கேத்தி விவசாயிகள்

ஈரோடு: ஈரோடு மாவட்டம் விளக்கேத்தியில், காட்டு நெல்லிக்காய் வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். வறட்சியிலும், நெல்லியின் வளர்ச்சி ஜோராராக இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தில் பல்வேறு முயற்சிகளை கையாண்டு, மற்ற மாவட்ட விவசாயிகளுக்கு இணையாக, ஈரோடு மாவட்ட விவசாயிகளும் முன்னேறி வருகின்றனர். கரும்பு, மஞ்சள், நிலக்கடலை, கிழங்கு வகைகள் உள்ளிட்ட பயிர் சாகுபடியில், பல சாதனைகளை மாவட்ட விவசாயிகள் நிகழ்த்தியுள்ளனர்.தற்போது, "ஏழைகளின் ஆப்பிள்' என்று அழைக்கப்படும், காட்டு நெல்லி வளர்ப்பிலும், ஈரோடு மாவட்ட விவசாயிகள் பலரும் ஈடுபட்டுள்ளனர். வறட்சியிலும், நெல்லி மரத்தின் வளர்ச்சி ஜோராராக இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.விளக்கேத்தி விவசாயிகள் கூறியதாவது:விளக்கேத்தியில், காட்டு நெல்லி வளர்ப்பில் பலரும் ஈடுபட்டுள்ளனர். உடலில் ரத்தத்தை விருத்தி செய்து, ஆரோக்கியத்தை தரக்கூடிய காட்டு நெல்லியை, மக்கள் பலரும் வாங்கி செல்கின்றனர். சிறு வியாபாரிகளுக்கு, கிலோ, 35 முதல், 40 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்.பல்வேறு பகுதியில், 40 முதல் 45 ரூபாய் வரை, காட்டு நெல்லியை சிறு வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். கோடை மழை பொய்த்துப் போன நிலையில், பயிர்கள் பலவும் காய்ந்து வறண்ட பூமியாக காட்சியளிக்கிறது.ஆனால், வறட்சியிலும், நல்ல விளைச்சலும், காய்களையும் தந்து, காட்டு நெல்லிக்காய், விவசாயிகளை தலைநிமிர வைத்துள்ளது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## நீரின்றி காயும் சவுக்கு மரங்கள்: விவசாயிகள் நிலை பரிதாபம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், விவசாய நிலத்தில் வளர்க்கப்படும், சவுக்கு மரங்கள் தண்ணீரின்றி காய்ந்து வருவதால், விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் பருவமழை பொய்த்துப் போனதால், விவசாய நிலங்கள் வறண்டு காணப்படுகிறது. வறட்சியின் பிடியில் சிக்கி தவித்த விவசாயிகள் பலர், தங்கள் விவசாய

நிலங்களை கூறு போட்டு, எஸ்டேட் அதிபர்களுக்கு விற்று வருகின்றனர்.இந்நிலையில், தனியார் விவசாய நிலங்களில் வளர்க்கப்பட்ட, சவுக்கு மரங்கள் வறட்சியால், காய்ந்து கிடக்கிறது. வனத்துறையின்றி, தனியார் மூலம் பெறப்பட்டு, வளர்க்கப்பட்டதால், விவசாயிகள் விழிபிதுங்கி வருகின்றனர்.விவசாயிகள் கூறியதாவது:தேசிய வனக்கொள்கை திட்டப்படி, 2007-08 முதல், தனியார் நிலங்களில் காடு வளர்ப்பு திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ்,தேக்கு, சவுக்கு, மலை வேம்பு, பீயன்,சில்வர்ஓக், வேம்பு, குமிழ் உள்ளிட்ட மரங்களை வனத்துறையினர், விவசாயிகளுக்கு வழங்கி வந்தனர்.ஆனால், மரங்கள் வளர்ப்பில் குறைவான சன்மானமே வழங்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில், அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு, தனியார் மூலம், சவுக்கு மரங்களை வாங்கி, வளர்த்து வந்தோம். பருவமழை பொய்த்துப் போனதால், சவுக்கு மரங்கள் யாவும் காய்ந்து போனது. சவுக்கு மரங்களை பராமரிக்க முடியாமல், விவசாயிகள் பலரும் திண்டாடி வருகின்றனர். மற்ற விவசாயிகளை போலவே, நாங்களும் மழையை எதிர்நோக்கி உள்ளோம்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### ஐந்து லட்சம் கிலோ ஏலக்காய் தேக்கம்

தேவாரம்:"ஸ்பைசஸ்' வாரிய சேர்மன், வியாபாரிகளின் "ஈகோ'வால், 40 கோடி ரூபாய் மதிப்பிலான, 5 லட்சம் கிலோ ஏலக்காய் தேங்கியுள்ளது. எம்.பி., தலைமையில் நடந்த பேச்சுவார்த்தைக்கு வியாபாரிகளுக்கு அழைப்பு இல்லாததால் தோல்வியில் முடிந்தது. ஏலக்காய் "ஆக்சன்' சென்டர்களில், குறைந்த பட்ச "பீட்' 50 பைசாவிலிருந்து, 5 ரூபாயாக உயர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த செப்., 25 முதல், வியாபாரிகள் சங்கத்தினர் ஏலத்தை புறக்கணித்துள்ளனர். "ஸ்பைசஸ்' வாரியத்தின் உத்தரவை ரத்து செய்யக்கோரி, மதுரை ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு மீதான விசாரணை நாளை நடைபெற உள்ளது. இந்நிலையில், நேற்று, புத்தடி ஸ்பைசஸ் பார்க்கில், இடுக்கி எம்.பி., தாமஸ் தலைமையில், பேச்சுவார்த்தை நடந்தது. ஏலமையத்தினர், ஏல விவசாயிகள் கலந்து கொண்டனர். வியாபாரிகள் கலந்து கொள்ளாததால், அதிருப்தியடைந்த எம்.பி., கூட்டத்தை விட்டு வெளியேறினார்.வியாபாரிகள் தரப்பில் கூறியதாவது: பழைய முறையில், குறைந்த பட்ச பீட் 50 பைசாவிலிருந்து அதிகபட்சமாக 9 ரூபாய் வரை உள்ளது. விருப்பமான ஏலக்காயை வாங்க ஒரு முறைக்கு 9 ரூபாய் பீட் அடிக்கும் முறை உள்ளது. வியாபாரிகளை கலந்து ஆலோசிக்காமல், ஸ்பைசஸ் வாரிய சேர்மன் ராஜ்திலக் விவசாயிகளின் ஆலோசனைபடி குறைந்தபட்ச பீட்டை 5 ரூபாயாக உயர்த்தியுள்ளார். கடந்த 10 நாட்களில் 5லட்சம் கிலோ ஏலக்காய் விற்பனையாகாமல்

தேங்கியுள்ளது, என்றனர்.விவசாயிகள்கூறியதாவது:வியாபாரிகளின்பிடிவாதத்தால், ஏலக்காய் வர்த்தகம் ஸ்தம்பித்துள்ளது. நாள்தோறும் 5 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்ட நிலை மாறி, விவசாயிகள் பணத்திற்கு சிரமப்படுகின்றனர்,என்றனர்.

### நாற்றங்கால் பணிகள் தாமதம்

தேவதானப்பட்டி:பெரியகுளம் தாலுகா பகுதியில் பருவமழை தாமதம் ஆவதால், நெல்நாற்றாங்கால் பணிகளை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். பெரியகுளம் தாலுகாவில், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்யும் மழைநீர் மூலம் சோத்துப்பாறை, மஞ்சளாறு அணைகள் நிரம்புகின்றன. வராகநதி, மஞ்சளாற்றில் வரும் நீரைக் கொண்டு 20க்கும் மேற்பட்ட கண்மாய்கள் நிரப்பப்படுகிறது. இதன் மூலம் தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, மேல்மங்கலம், வடுகபட்டி ஆகிய கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கரில் முதல்போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. பருவமழை தாமதம்: வழக்கமாக விவசாயிகள் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நெல் நாற்றங்கால் பணியை துவங்கி தொடர்ந்து நெல் நடவுப்பணி நடக்கும். பருவழை தாமதம் ஆகி வருவதால் வராகநதி, மஞ்சளாற்றில் நீர் வரத்து இல்லை. ஆற்று நீரை ஆதாரமாக கொண்ட கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாய கிணறுகளில் நீர் வற்றி விட்டது. நெல் நாற்றாங்கால் பணியை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். பெரியகுளம் தாலுகா பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் முதல்போக நெல் சாகுபடி கேள்விக்குறியாக உள்ளது.

### கிராம சபை கூட்டம்

ராமநாதபுரம்:பட்டணம்காத்தான் முதல்நிலை ஊராட்சியில், கிராம சபை கூட்டம், தலைவர் சித்ரா மருது தலைமையில் நடந்தது. துணை பி.டி.ஒ., முத்துகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். மகளிர் சுகாதார வளாகத்தை, மகளிர் குழுக்கள் மூலம் பயன்படுத்துதல், வடகிழக்கு பருவ மழைக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல், சமூக பொருளாதார மற்றும் ஜாதி கணக்கெடுப்பை, மக்கள் முழுமையாக பயன்படுத்தி கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.துணைத்தலைவர் ராஜேந்திரன், ஜெ.,பேரவை துணை செயலாளர் மருதுபாண்டியன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் வீரமாணிக்கம் பங்கேற்றனர். ஏற்பாடுகளை ஊராட்சி செயலர் நாகேந்திரன் செய்தார். * சக்கரக்கோட்டை ஊராட்சி மேலசோத்தூரணியில்,

தலைவர் நூர்முகம்மது தலைமையில் நடந்தது. தீண்டாமை ஒழிப்பு, குழந்தை தொழிலாளர்கள் முறை ஒழிப்பு குறித்து, மக்கள் சபதம் எடுத்தனர். முழு சுகாதார திட்டத்தை செயல்படுத்துதல், வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துணைத்தலைவர் பொன்னுத்தாய், உறுப்பினர் பாஸ்கர சேதுபதி பங்கேற்றனர்.

### பண்ணைக்குட்டை அமைக்க நிதி இன்றி விவசாயிகள் தவிப்பு

காரைக்குடி:மழைக்காலங்களில் நீராதாரத்தை பெருக்கும் வகையிலான, பண்ணைக்குட்டை அமைக்க, அரசு இதுவரை நிதி ஒதுக்காததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.12வது ஐந்தாண்டு திட்டத்தில், 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி என்ற இலக்கினை அடைய பல்வேறு உத்திகள் மற்றும் அணுகுமுறைகள் அரசால் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி, மண்வள மேலாண்மை முறைகளை தீவிரப்படுத்துதல், நீர் மேலாண்மை முறைகளை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், வேளாண் பொறியியல் துறை சார்பில், 30 மீட்டர் நீளம், 30 மீட்டர் அகலத்தில், 1.6 மீட்டர் ஆழத்தில், 60 ஆயிரம் செலவில், விவசாய நிலங்களில் பண்ணை குட்டை அமைக்கப்படுகிறது. 10 சதவீதம் தொகை மட்டுமே, பயனாளி செலுத்த வேண்டும்.மழைக்காலம் துவங்கும் முன்பு ஜூலை முதல் ஆகஸ்ட் மாதத்தில், இதற்கான நிதி வந்து விடும். இதனால் மழைக்காலத்துக்கு முன்பு, பண்ணைக்குட்டையை விவசாயிகள் அமைத்து வந்தனர். இந்த ஆண்டு இதுவரை அரசு நிதி ஒதுக்கீடு செய்யாததால், வேளாண்மை பொறியியல் அலுவலகத்துக்கு விவசாயிகள் அலைந்த வண்ணம் உள்ளனர்.விவசாயி ஒருவர் கூறியதாவது: பண்ணை குட்டை அமைக்க, இதுவரை பணம் வரவில்லை, என கூறுகின்றனர். தற்போது விவசாயிகள்நடவு பணியை மேற்கொண்டுள்ளதால், பண்ணை குட்டை அமைக்க, டிராக்டர் உள்ளிட்ட இயந்திரங்கள், நிலத்துக்குள் வர வாய்ப்பு இல்லை. இனி அடுத்த ஆண்டு தான் சாத்தியப்படும்,என்றார்.வேளாண் பொறியியல் அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டு காரைக்குடி பகுதியில் 10 பண்ணை குட்டடை அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை நிதி ஒதுக்கீடு இல்லை, என்றார்.

### தேனீ வளர்ப்பு கூட்டுறவுசங்கம் இயங்க நடவடிக்கை தேவை

சிங்கம்புணரி: சிங்கம்புணரி ஒன்றியம் மேலபட்டிதேனீ வளர்ப்பு கூட்டுறவு சங்கம் மீண்டும் இயங்க நடவடிக்கை தேவை என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். மேலப்பட்டியில் 1986ல்

தேனீ கூட்டுறவு சங்கம் துவக்கப்பட்டு இயங்கியது.பிரான்மலை ஒடுவன்பட்டி,சேர்வைகாரன்பட்டி, மலைஅடிவார கிராம விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சியளித்து வளர்க்க தேவையான உபகரணங்கள் வழங்கபட்டன.விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் பெட்டி வைத்து உப தொழிலாக தேனீ வளர்த்தனர்.பலருக்கு வேலை கிடைத்தது.மலைப்பகுதியான இங்கு உற்பத்தியாகும் மருத்துவ குணம் கொண்டதேனிற்கு அதிக கிராக்கியிருந்தது.சிலஆண்டுகளுக்கு முன் சங்க த்தை நிர்வகித்த அலுவலர் ஓய்வுபெற்றார்.அதிலிருந்து சங்கம் செயல்படாமல் முடங்கி விட்டது. உற்பத்தியாகும் தேனை விற்க வசதியின்றி விவசாயிகள் தேனீ வளர்ப்பை கைவிட்டனர். தற்போது தமிழகம் முழுதும் கூட்டுறவு சங்க தேர்தல் நடைபெறவுள்ள சுழலில் தேனீ கூட்டுறவு சங்கத்தை இயங்க தேவையான நடவவடிக்கை எடுக்கவேண்டும்.

### சர்க்கரை ஆலையில் தீ மூட்டும் விழா 15ம் தேதி அரவை பருவம் துவக்கம்

திருவாலங்காடு : திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரவைப் பருவம் வரும், 15ம் தேதி துவங்குவதை முன்னிட்டு, பாய்லர்களுக்கு தீ மூட்டும் விழா நடந்தது. திருவள்ளூர் அடுத்த, திருவாலங்காட்டில் உள்ளது திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை. இந்த ஆலையில் ஆண்டுதோறும் கரும்பு அரவைப் பருவம் துவங்கும், 15 நாட்களுக்கு முன் பாய்லர்களுக்கு தீ மூட்டும் நிகழ்ச்சி நடைபெறும். இவ்வாண்டு அரவைப் பருவம் வரும், 15ம் தேதி துவங்க உள்ளது. இதையொட்டி, பாய்லர்களுக்கு தீ மூட்டும் நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாகி பாஸ்கர், கரும்பு அலுவலர்கள் மற்றும் கரும்பு விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதுகுறித்து ஆலை நிர்வாகி பாஸ்கர் கூறும்போது, ""அரவைப் பருவத்துக்கு, தொடர்ந்து, 15 நாட்கள் தீ மூட்டியதும், பாய்லர்கள் குறிப்பிட்ட டிகிரி வெப்ப நிலையை அடையும். வரும், 15ம் தேதி கரும்பு அரவைப் பருவம் துவங்கும்," என்றார்.

### தேசிய காய்கறிகள் சாகுபடி ஊக்குவிப்பு பயிற்சி முகாம்

விழுப்புரம்:தேசிய காய்கறிகள் சாகுபடி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விழுப்புரத்தில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.கோலியனூர் ஒன்றியத்தை சேர்ந்த விவசாயிகளுக்கான சிறப்பு ஊக்குவிப்பு பயிற்சி முகாம் விழுப்புரம் ஜெயசக்தி திருமண மண்டபத்தில் நடந்தது. தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு தலைமை தாங்கினார்.தேசிய காய்கறிகள் உற்பத்தி சங்க மேலாளர் மூர்த்தி வரவேற்றார். பெங்களூரு பேயர்கிராப் சயின்ஸ்

நிறுவனத்தின் மண்டல மேலாளர் ராகவேந்திரா, மண்டல விற்பனை மேலாளர் சபரிராஜன், விழுப்புரம் பகுதி அலுவலர் சதீஷ்குமார், காய்கறி விற்பனை அலுவலர் பிரபு ஆகியோர் பேசினர். இவர்கள், பயிர் சாகுபடி தொழில் நுட்பம் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து பயிற்சி அளித்தனர்.

விழுப்புரம் நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் விக்ரமன், மத்திய வங்கியின் முதுநிலை மேலாளர் கார்த்திகேயன், கோலியனுார் தோட்டக்கலை உதவி இயக்குனர் வீராசாமி, ஓய்வு பெற்ற வேளாண் துறை அலுவலர் ராமமூர்த்தி ஆகியோர் காய்கறிகள் உற்பத்தி, வங்கி கடன் பெறும் முறை மற்றும் அரசு மானியங்கள் குறித்து பேசினர்.இதில் தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பரமசிவம், கலையரசன், இளவரசன் உட்பட 5 காய்கறி உற்பத்தி குழுக்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாய தொழிலாளர் சங்கஒப்பாரி போராட்டம் வாபஸ்

உளுந்துார்பேட்டை:உளுந்துார்பேட்டையில் இன்று நடக்க இருந்த விவசாய தொழிலாளர் சங்க போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.உளுந்துார்பேட்டை அடுத்த பா.கிள்ளனுார் கிராமத்தில் முதியோர் உதவி தொகை வழங்காததை கண்டித்து அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் தாசில்தார் அலுவலகம் முன்பு இன்று(4ம் தேதி) ஒப்பாரி போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தனர்.அதையொட்டி நேற்று தாசில்தார் மார்கபந்து தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது. இதில், நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டதையொட்டி போராட்டம் கைவிடப்பட்டது.கூட்டத்தில் மண்டல துணை தாசில்தார் வெங்கடேசன், சப் இன்ஸ்பெக்டர் ஞானசேகரன், சங்க ஒன்றிய செயலாளர் ஏழுமலை, மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

03.10.2012 P.M

## அக்.2-ல் உணவு பதப்படுத்தல் இலவச பயிற்சி துவக்கம்

கோத்தகிரி, செப். 29: கோத்தகிரியில் சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனமான சிப்போ சார்பில் தொழில் முனைவோருக்கான 6 வார கால உணவு பதப்படுத்தல் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட உள்ளது.

÷வரும் அக்.2-ம் தேதி துவங்கும் இந்தப் பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்டோர் பங்கேற்கலாம். கோத்தகிரி, உதகை, குன்னூர் ஆகிய பகுதிகளில் இந்தப் பயிற்சி நடைபெற உள்ளது. பயிற்சியில் பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் பங்கேற்கலாம்.

÷உணவு பதப்படுத்துதல் தொழிலுக்குரிய வாய்ப்புகள், வங்கிக் கடன், தொழிலுக்கான மானியங்கள், தேவையான உபகரணங்கள் ஆகியவை குறித்து அந்தத் துறையில் சிறந்து விளங்கும் நிபுணர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர்.

÷பயிற்சியில் உணவு தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பால் இறைச்சி ஆகியவற்றை பதப்படுத்துதல் குறித்து விளக்கம் அளிக்கப்படும். பயிற்சியில் பங்கேற்ற விரும்புவோர் 0452-2602511 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## தூத்துக்குடியில் 3 மடங்கு நெல் உற்பத்தி குறைவு



பருவமழை பொய்த்ததால் தூத்துக்குடி மாவட்டத்தில் நிகழாண்டில் நெல் உற்பத்தி பெருமளவு குறைந்துள்ளது. இதனால், விவசாயில் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சம்பா மற்றும் கார் என இரண்டு பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். கூடுதல் தண்ணீர் இருந்தால் மேலும் ஒரு பருவம் நெல் சாகுபடி செய்யப்படும். ஆனால், அண்மைக் காலங்களாக சம்பா மற்றும் கார் சாகுபடி செய்யவே தண்ணீர் போதாத நிலை நீடித்து வருகிறது.

4000 ஹெக்டேர் கார் சாகுபடி செய்ய நிலம் இருந்த போதிலும் தண்ணீர் இல்லாததால் கடந்தாண்டில் 2400 ஹெக்டேர் நிலப்பரப்பில் கார் பருவத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. ஆனால், பருவமழை பொய்த்ததாலும், பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாததாலும் கார் சாகுபடி அளவு குறைந்துள்ளது. மாவட்டத்தில் நிகழாண்டில் 747 ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க கிணற்று பாசனம் மற்றும் ஆழ்துளை குழாய் மூலம் எடுக்கப்படும் தண்ணீர் ஆகியவற்றை நம்பியே இந்த சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ராஜா சிங் கூறுகையில், கடந்தாண்டில் ஏறத்தாழ 19,200 டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. ஆனால், நிகழாண்டில் இதுவரை 5976 டன் நெல் மட்டுமெ உற்பத்தி செய்யப்பட்ள்ளது. கடந்தாண்டைவிட மூன்று மடங்கு அளவுக்கு நெல் உற்பத்தி குறைந்துள்ளது. பருவமழை பெய்யாதது தான் இதற்கு காரணம். அணைகளில் இருந்து தண்ணீர் வரத்து இல்லாததால் விவசாயிகள் கிணற்றுப் பாசனத்தையே நம்பி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

வறட்சி காரணமாக நெல் சாகுபடி பாதித்த நிலையில், கால்நடைகளுக்கு தேவையான உணவு பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது..ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் போன்ற பகுதிகளில் வறட்சி காரணமாக மேய்ச்சல் நிலங்கள் பாலைவனம் போல காட்சியளிப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## பலன் தரும் பசுமைக் கூடாரம்!



வேளாண்மைத் தொழில்நுட்பத்தில் 200 ஆண்டுகள் பழைமையானதாக இருந்தாலும், இந்தியாவில் புதிய தொழில்நுட்பமாக உள்ள பசுமைக் கூடாரத்தில் பயிர் சாகுபடி முறை மிகவும் பலன் தரும் வழிமுறையாக உள்ளது.

நமது நாட்டில் 95 சத பயிர்கள் வயல் வெளிகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சில வகைப் பயிர்களை எல்லாவித தட்பவெப்ப சூழ்நிலைகளிலும் வளர்க்க இயலாது. இந்தப் பயிர்களுக்கு ஏற்ற சூழல்நிலையை உருவாக்கினால் மட்டுமே எந்த இடங்களிலும் இந்தப் பயிர்களை வளர்க்க முடியும்.

பசுமைக் கூடாரம்: பசுமைக் கூடார தொழில்நுட்பம் என்பது பயிர்களுக்கு சாதகமான சுற்றுப்புறச் சூழலை வழங்குவதேயாகும். காற்று, குளிர், மழை அதிகப்படியான சூரிய ஒளி, அதிக வெப்பநிலை, பூச்சி நோய்களிலிருந்து செடிகளைப் பாதுகாக்க இந்த தொழில்நுட்பம் மிகவும் உதவியாக உள்ளது.

பசுமைக் கூடாரம் என்பது ஒளி ஊடுருவக்கூடிய அல்லது பிளாஸ்டிக் கூரையினால் போர்த்தப்பட்ட அமைப்பாகும். இந்தக் கூடாராத்தினுள் பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சலுக்குத் தேவையான தட்ப வெப்பநிலை எளிதில் கிடைக்கும். கரியமிலவாயு உள்புறத்திலேயே தங்கி விடுவதால் தாவரத்தின் ஒளிச் சேர்க்கைக்கு அதிகப்படியான கரியமில வாயு கிடைக்கிறது. இதன் மூலம் பயிர்களில் 5 முதல் 10 மடங்கு அதிக ஒளிச்சேர்க்கை நடைபெறுகிறது.

இதன் காரணமாக விளைச்சல் அதிகமாகவும், தரமான விளைபொருள்களும் கிடைக்கின்றன. மேலும், மண்ணிலிருந்து ஆவியாகும் நீரும் உள்புறத்திலேயே தங்கிவிடுவதால் ஈரப்பதமும் அதிகமாகிறது. குறைந்த நீர்ப்பாசனமே தேவைப்படும்.

பயன்கள்-நன்மைகள்: பூச்சி, நோய், எலிகள் மற்றும் பறவைகள் பயிரைத் தாக்குவதிலிருந்து

பாதுகாக்கலாம். அதிகமான வெப்பம், பெரும் மழை, அதிவேகக் காற்றுகளால் பயிருக்குச் சேதம் ஏற்படுவதும் தடுக்கப்படுகிறது. பூச்சிக் கொல்லிகள், பூசணக் கொல்லிகள், உரங்கள் ஆகியவை சரியான அளவில் உபயோகிக்கலாம். ஆண்டு முழுவதும் எந்தப் பயிரையும் உற்பத்தி செய்யலாம்.

சந்தையில் பருவமில்லா காலத்தில் வரும் விளைபொருள்களுக்கு அதிக வரவேற்பும், அதிக விலையும் கிடைக்கும். எனவே, அத்தகைய தருணங்களில் பசுமைக் கூடார உற்பத்தி முறை பெரிதும் உதவியாக இருக்கும். காய்கறிகளைப் பதப்படும் தொழில்சாலைகளுக்குத் தேவையான காய்கறிகளை தொடர்ந்து உற்பத்தி செய்து வழங்க முடியும்.

50 நாடுகளில் பயன்: பசுமைக் கூடார அமைப்புகள் இப்போது உலகில் 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் வணிக ரீதாயாக அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஆண்டுதோறும் 2.8 பில்லியன் டாலர்கள் ஈட்டக் கூடிய மலர் சாகுபடி, 400 ஹெக்டர் பரப்பில் பசுமைக் கூடார முறையில் மேற்கொள்ளப்படுகிறது. ஜப்பானில் 54 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் பசுமைக் கூடார உற்பத்தி முறை உள்ளது. இந்தியாவில் 1980-ம் ஆண்டுதான் பசுமைக் கூடாரத் தொழில்நுட்பம் தொடங்கப்பட்டது. முதலில் ஆராய்ச்சி செயல்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இப்போதுதான் உலகமயமாக்கல், வேளாண் விளைபொருள் ஏற்றுமதியால் பசுமைக் கூடார தொழில்நுட்பத்துக்கான தேவை அதிகரித்து வருகிறது.

உள்ளூர் சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி பயிர் வகைகள் பயிரிடும் வகையில் இந்தக் கூடாரங்களை அமைக்க முடியும். 4 வகை பசுமைக் கூடார முறைகள் உள்ளன.

குறு நுட்ப பசுமைக் கூடாரம்: இந்த வகை கூடாரத்தில் காலநிலைக் காரணிகள் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்காது. மூங்கில் கட்டைகள், பாலீத்தின் பைகள் உபயோகப்படுத்தி கட்டப்படும். பூச்சிகளை கட்டுப்படுத்தும் வலைகளையும் பயன்படுத்தலாம். வெயில் காலங்களில் பக்கச் சுவர்களை திறந்து வைப்பதன் மூலம் வெப்ப நிலையைக் குறைக்கலாம். இந்த வகை கூடாரம் குளிர்ப் பிரதேசங்களுக்கு ஏற்றவையாகும்.

மித நுட்ப பசுமைக் கூடாரம்: இயந்திரங்ளைக் கொண்டு இந்த வகை கூடாரங்கள் அமைக்கப்படுகின்றன. இரும்புக் கம்பிகளைக் கொண்டு அமைக்கப்படுவதால் வேகமாக வீசும் காற்றை எதிர்த்து நிற்கும் தன்மை கொண்டவை. காற்று வெளியேற்றி விசிறிகள், பனிப்புகை குழாய்கள், குளிர்விக்கும் பட்டைகள் ஆகியவற்றை பயன்படுத்தி கூடாரத்தில் தேவையான அளவு வெப்பநிலை, ஈரப்பதம் ஆகியவற்றை நிலவச் செய்ய முடியும். பயிர் பருவம் முழுவதும்

தேவைக்கேற்ப சூழலை மாற்றிக் கொள்ளலாம். தரமான மலர்களை இந்த வகையில் உற்பத்தி செய்ய முடியும். வறண்ட வானிலை உள்ள பகுதிகளில் இந்தக் கூடாரங்கள் உகந்தவையாகும்.

உயர்நுட்ப பசுமைக் கூடாரம்: முழுமையான தானியங்கி காலநிலைக் கட்டுப்பாட்டு இயந்திரங்களைக் கொண்டவை. இந்த வகை கூடாரம் அமைக்க செலவு அதிகமாக இருந்தாலும் தரமான உற்பத்திப் பொருள்களை வழங்குவதால் செலவை ஈடு செய்யலாம். இந்தக் கூடாரத்தில் வெப்பநிலை, ஈரப்பதம், வெளிச்சம் போன்ற காரணிகளின் அளவை ஓர் உணர் கருவியானது உள் வாங்கிக் கொள்ளும். அந்த கருவியில் உள்ளவற்றை சரிபார்த்து தேவையான மாற்றங்களை செய்து கொள்ளலாம்.

மலைச் சரிவுகளுக்கான கூடாரம்: சமனற்ற கூரைகளைக் கொண்ட பசுமைக் கூடாரங்கள் மலைச் சரிவுகளில் கட்டுப்படும். சரிவுகளுக்குத் தகுந்தபடி வெவ்வேறு அளவுகளில் அமைக்கப்படும். தானியங்கி காலநிலைக் கட்டுப்பாடுகள் பயன்படுத்துவதில்லை. இதேபோல், பிளாஸ்டிக் பசுமைக் கூடாராங்களை குறைந்த செலவில் அமைக்கக் கூடியது. புற ஊதாக்கதிர்கள் கொண்டு மேம்படுத்தப்பட்ட தாள்களால் அமைக்கப்படும் இந்தக் கூடாரங்கள் 4 ஆண்டுகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

## நெல் பயிரில் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்த என்ன வழி?




நெல் சாகுபடியில் நோய் கட்டுப்பாடு மிகவும் அவசியம். நெல் பயிரைக் குலை நோய், இலைப்புள்ளி நோய், இலை உறை கருகல் நோய், கதிர் உறை அழுகல் நோய், நெல் மணி அழுகல் நோய் போன்ற பல்வேறு நோய்கள் தாக்குகின்றன.

இந்த நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பையூர் மண்டல வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலைய நோயியில் துறை உதவிப் பேராசியர் கி.கல்பனா கூறியது:

குலை நோய்: இந்த நோய் நாற்றங்காலில் தொடங்கி கதிர் விடும் பருவம் வரை எல்லா நிலைகளிலும் தாக்குகிறது. நோயின் அறிகுறிகளை இலை, கதிரின் கழுத்துப் பகுதி மற்றும் தானிய விதைகளின் மீது காணலாம். நோயின் தொடக்க நிலையில் சிறிய ஊதா கலந்த பச்சை நிறத்தில் புள்ளிகளாகத் தோன்றி, பின்னர் நீள் வடிவத்தில் சாம்பல் நிற மையப் பகுதியையும், பழுப்பு நிற ஓரத்தையும் கொண்ட பெரிய புள்ளிகளாக மாறும். கடுமையாகத் தாக்கப்பட்ட நாற்றங்கால், நெல் வயல் எரிந்து போனது போலத் தோற்றமளிக்கின்றன.

மேலாண்மை: நோய் எளிதில் தாக்கும் ரகங்களை பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். கார்பென்டசிம் அல்லது திரம் (2 கிராம் 1 கிலோ விதைக்கு) போன்ற பூசணக் கொல்லி கொண்டு விதையை நேர்த்தி செயவதன் மூலமும், கார்பென்டசிம் 200 கிராம் அல்லது டிரைசைக்லோஸ் 400 கிராம் அல்லது கார்பென்டசிம் 200 கிராம் (ஒரு ஹெக்டருக்கு) தெளிப்பதின் மூலம் கட்டுப்படுத்தலாம்.

இலைப்புள்ளி நோய்: பயிரின் எல்லாப் பருவங்களிலும் இந்த நோய் தாக்கும். பழுப்பு நிற சிறு புள்ளிகளாக இலைகளில் தோன்றி, பின்னர் பெரிதாகி புள்ளிகள் இணைந்து பெரிய புள்ளிகளாகத் தோன்றும். இதனால், இலை கருகி விடும். இந்த நோய் தாக்குவதால், விதை முளைக்கும் திறன் குறைகிறது. இளம் நாற்று இறந்து விடும்.

மேலாண்மை: வயல் மற்றும் வரப்புகளை களையின்றி வைத்திருத்தல், நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களைப் பயிரிடுதல், திரம் அல்லது கோப்டன் அல்லது கார்பென்டாசிம் (2 கிராம் 1 கிலோ விதைக்கு) கொண்டு விதை நேர்த்தி செய்தல் மற்றும் மேங்கோசெப் 80 கிராம் அல்லது கேப்டபால் 40 கிராமை 8 சென்ட் நாற்றங்காலுக்கும், நடவு வயலில் ஹெக்டருக்கு கார்பென்டாசிம் 250 கிராம் அல்லது மேங்கோசெப் 1 கிலோ அல்லது புரப்பிகொனசோல் 200 மி.லி. தெளிப்பதன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இலை உறை கருகல் நோய்: இந்த நோய் பயிரை தூர் விடும் சமயத்திலிருந்து கதிர் விடும் சமயம் வரை தாக்குகிறது. முதலில் தண்ணீருக்கு அருகில் உள்ள இலைகளில் காணப்படும். பிறகு நீள் வட்ட வடிவ பச்சை கலந்த பழுப்பு நிறப் புள்ளிகளாக காணப்படும். பிறகு, இந்தப் புள்ளிகள் பெரிதாகி சாம்பல் நிற மையப் பகுதியையும் பழுப்பு நிற ஓரப் பகுதியையும் கொண்டு இருக்கும். பிறகு இந்தப் புள்ளிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மேல் நோக்கிப் பரவி இலை உறை கருகல் நோயை ஏற்படுத்துகிறது.

மேலாண்மை: அதிக நெருக்கமாகப் பயிரை நடவு செய்யாமல், போதிய இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். நோய் தாக்கிய வயலிலிருந்து அறுவடைக்குப் பின்னால் கிடக்கும் பயிர் பாகங்களை நீக்கி விட வேண்டும். வயல் வெளிகளையும் வரப்புகளையும் களைகள் இன்றி சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். தழைச்சத்து உரத்தை பிரித்து இடுதல் அவசியம். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இடுதல் வேண்டும். நோய் தாக்கிய வயலிலிருந்து அடுத்த வயல்களுக்குப் பாசன நீர் செல்வதைத் தவிர்க்க வேண்டும். ஹெக்டருக்கு கார்பென்டாசிம் 250 கிராம் அல்லது புரப்பிகொனசோல் 200 மி.லி. மருந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

கதிர் உறை அழுகல் நோய்: இந்த நோய் கதிரை மூடியுள்ள இலை உறையைத் தாக்கும். இந்தப் பூசணம் நீள வட்ட அல்லது ஒழுங்கற்ற சாம்பல் பழுப்பு நிற புள்ளிகளாகத் தோன்றும். இவை பெரிதாகி சாம்பல் நிற மையத்தையும் பழுப்பு நிற ஓரப் பகுதியையும் கொண்டிருக்கும்.

மேலாண்மை: பரிந்துரையின் படி விகிதத்தில் உரங்களை இடுதல், சரியான இடைவெளியில் பயிர்களை நடுதல் மற்றும் கார்பென்டாசிம் 250 கிராம் அல்லது குளோரோதிலோனில் (1 கிலோ ஒரு ஹெக்டருக்கு) என்ற அளவில் பூட்டைப் பருவத்தில் 15 நாள்கள் இடைவெளியில் விட்டு இரு முறை தெளிக்க வேண்டும்.

நெல்மணி அழுகல் நோய்: இந்த நோய் நெல் மணிகளில் மட்டுமே காணப்படும். நோய் தாக்கிய நெல் கதிரில் உள்ள நெல் மணியும் பூஞ்சாணத் தாக்குதல் மஞ்சள் நிறமடைந்துவிடும். இதனால், நெல் மணியின் தரம் குறைந்து மணி பிடிப்புத் திறனும் பாதிக்கும்.

மேலாண்மை: நோய் தாக்கதாத விதைகளைப் பயன்படுத்துதல், முன் கூட்டி நடவு செய்தல், வயல்கள் மற்றும் வரப்புகளைச் சுத்தமாக வைத்திருத்தல், அதிக தழைச் சத்து இடுவதைத் தவிர்த்தல், அறுவடை செய்யும் போது நோய் தாக்கிய நெல்மணிகளை அகற்றுதல் ஆகியவற்றின் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம். மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நெல் பயிரில் அதிக லாபம் ஈட்டலாம்.

தொடர்புக்கு: 04343-290600.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு புதன்கிழமை மேலும் அதிகரித்துள்ளது.

காவிரி ஆணைய உத்தரவை செயல்படுத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, கர்நாடக அணைகளில் இருந்து வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரியில் திறந்துவிடப்பட்டது.

கடந்த மூன்று நாள்களாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 9 ஆயிரம் கன அடியை எட்டியுள்ளது. மேட்டூர் அணைக்கு புதன்கிழமை மாலை வரும் நீரின் அளவு வினாடிக்கு 9,881 கன அடியாக அதிகரித்துள்ளது.

பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 13 ஆயிரம் கன அடியாக இருந்தது செவ்வாய்கிழமை மாலை முதல் வினாடிக்கு 14 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 72.18 அடியாக இருந்தது. நீர் இருப்பு 34.60 டி.எம்.சியாக இருந்தது.

நீர் வரத்து அதிகரித்திருந்தாலும் நீர் திறப்பு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது.

பிலிகுண்டுலுவில் கண்காணிப்பு காவிரியில் கர்நாடகம் திறந்துவிட்டுள்ள தண்ணீரின் அளவை மத்திய, மாநில அரசு அதிகாரிகள் பிலிகுண்டுலுவில் தொடர்ந்து கண்காணித்துப் பதிவு செய்து வருகின்றனர்.

பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் படகுகளில் சென்று தண்ணீர் வரத்தைக் கண்காணிக்கின்றனர்.

புதன்கிழமை மாலை நிலவரப்படி 12 ஆயிரம் கன அடி அளவுக்குத் தண்ணீர் வந்து கொண்டிருந்ததாக கண்காணிப்புப் பணியில் உள்ள அலுவலர்கள் தெரிவித்தனர்.

## குறைகிறது அணைகளின் நீர்மட்டம்: மழைக்காக காத்திருக்கும் விவசாயிகள்



திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. கார் பருவம் பொய்த்து விட்ட நிலையில் வடகிழக்கு பருவ மழை பெய்தால்தான் பிசான பருவ சாகுபடி செய்ய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

தென்மேற்கு பருவ மழை பொய்த்த காரணத்தால் தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடி செய்யவில்லை. இந்த நிலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. வடகிழக்கு பருவ மழை பெய்தால் மட்டும் பிசான பருவ சாகுபடி பணிகளை தொடங்க அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

புதன்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 43.15 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 56.27 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 44.60 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 61.69 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக தாமிரவருணி ஆற்றில் 404.75 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதே நிலை நீடித்தால் 15 தினங்களில் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது. தற்போது வெப்பம் அதிகமாக இருப்பதால் நீர்இருப்பு வேகமாக குறைந்து வருகிறது என அணை வட்டாரங்கள் தெரிவித்தன. தென்மேற்கு பருவ மழை பொய்த்த காரணத்தால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் நீர்வரத்து குறைந்து காணப்படுவதால் அணைகளுக்கு பெரிய அளவில் நீர்வரத்து இல்லை.

வடகிழக்கு பருவ மழை இம்மாத இறுதியில் தொடங்கி பெய்தால்தான் அணைகளுக்கு நீர்வரத்து கிடைக்கும். பிசான பருவ சாகுபடி செய்ய அணைகளில் தண்ணீர் திறக்க முடியும் என்ற நிலை காணப்படுகிறது.

கடந்த 50 வருட கால வரலாற்றில் தாமிரவருணி பாசனத்தில் விவசாயம் பொய்த்ததில்லை. கார் பருவம் பொய்த்து விட்டதால் இம்மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. பருவ மழை கை கொடுத்தால் மட்டுமே பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு தண்ணீர் வழங்க முடியும்.